**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8082876

03/AC/2024/CC-I

1. District மாவட்டம்: Chennai | PS: காவல்நிலையம்: City special unit-III | Year: ஆண்டு | FIR No.: மு.த.அ. எண் | Date: நாள் 26/04/20

2. (i) Act சட்டம்: Cr.P.C. Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Act (Amendment) 2018. Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 25/04/2024.
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 14.40hrs | Time to : நேரம் வரை 23.15 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26/04/2024 | Time : நேரம் 13.00hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26/04/2024 | Time : நேரம் 13.00hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 23 Kms, North.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Block development office, Red hills Mad Road, Service Road Door No 5675 P2X, Ma -shmi Nagar, Puzhal.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் Puzhal | District : மாவட்டம் Thiruvallur Distr

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. M. Inbaraj | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Deputy Inspect cell Officer, Spec Tahsildar, Unit- Cheennai periph Ring Road, Thiruv
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் | (g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. Manisekar. A. BDO (Block Panchayat), Block development office, opp Puzhal prision, D.No 5675 P2X, M -shmi Nagar, Puzhal.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Unaccounted money of Rs 1,11,500/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமா பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .................. பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புல ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Com Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதா கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒ

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் C. UMADE
Rank: நிலை ....................No. எண்
INSPECTOR OF PO
CSU-III, DVA
Alandur, Chen

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டு, திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் மற்றும் சென்னை நகர ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-3, துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையில் காவல் ஆய்வாளர்கள் மற்றும் காவல் ஆளிநர்கள் இன்று 25.04.2024 பிற்பகல் சுமார் 14.40 மணியளவில் புழல் ஊராட்சி ஒன்றியம் அலுவலகம் வந்து திரு.மணிசேகர், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), புழல் அவர்களிடம் எங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு அவருடைய ஒத்துழைப்புடன் திடீர் கூட்டுத்தணிக்கையின் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது கூட்டு தணிக்கையில் பங்குபெற்ற குழு அலுவலர்களின் விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| துறை தலைமை அலுவலகம் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம்<br>புழல்,<br>திருவள்ளூர் மாவட்டம் |
| திடீர் கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அதிகாரிகள் | 1. திரு.மு.இன்பராஜ<br>தனிவட்டாட்சியர் (நி.எ) அலகு -3<br>சென்னை எல்லை சாலை திட்டம்,<br>திருவள்ளூர்<br><br>2. திரு.S.சம்பத்குமார்<br>காவல் துணை கண்காணிப்பாளர்<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>நகர சிறப்பு பிரிவு-3<br>சென்னை-16.<br><br>3. திருமதி.C.உமாதேவி,<br>காவல் ஆய்வாளர்<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>நகர சிறப்பு பிரிவு-3<br>சென்னை-16.<br><br>4. திரு.M.அசோக்பாபு<br>காவல் ஆய்வாளர்<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,<br>நகர சிறப்பு பிரிவு-3<br>சென்னை-16. |

Submitted :

FIR Continuation (Coloumn-12)

Today 26.04.2024 at 13.00 hrs, when I was on duty at my office of DVAC, City Special Unit-III Detachment, I received the endorsement order of the Deputy Superintendent of Police, City Special Unit-III, Vigilance and Anti Corruption for register a case and report dt 26.04.2024, consequent to the tapal containing the complaint of Tr.M.Inbaraj, Special Tahsildar, (Land Acquisition, Thiruvallur), (Inspection Cell Officer), Unit-3, Chennai Peripheral Ring Road, Project, Thiruvallur, dated 26.04.2024 enclosed with proceedings of the Joint Surprise Check conducted at the O/o Block Development Office, Puzhal, Thiruvallur District on 25.04.2024 between 14.40 hrs and 23.15 hrs. Statements and copies of records. The report of Deputy Inspection Cell Officer, Special Tahsildar(L.A) and proceedings runs as follows: அனுப்புனர், மு.இன்பராஜ், தனிவட்டாட்சியர் (நி.எ) அலகு -3, சென்னை எல்லை சாலை திட்டம், திருவள்ளூர். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, நகர சிறப்பு பிரிவு - 3, ஆலந்தூர், சென்னை-16. ந.க. எண்.09 ஆ1 நாள் 26.04.2024, அய்யா, பொருள், திடீர் கூட்டு ஆய்வு - புழல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் திடீர் கூட்டுத் தணிக்கை மேற்கொண்டது - ரூ.1,11,500/- மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாக திருவள்ளூர் மாவட்டம் புழல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சென்னை-16, ஆலந்தூர், நகர சிறப்பு பிரிவு-3 காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய தங்கள் குழுவினருடன் நான் இணைந்து மேற்கொண்ட திடீர் கூட்டுத் தணிக்கை 25.04.2024 அன்று பிற்பகல் 14.40 மணி முதல் இரவு 23.15 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி தணிக்கையின் போது கணக்கில் வராத தொகை ரூ.1,11,500/- மற்றும் ஆவணங்கள், நபர்களிடம் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவை மேல் நடவடிக்கைக்காக தங்களுக்கு அனுப்பப்படுகிறது. இதன் தொடர் நடவடிக்கை குறித்து தெரிவிக்குமாறு கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. Enclosure 1). Original Proceedings dated 25.04.2024, 2). Cash Rs.1,11,500/-, 3). Statement of Witnesses, 4).Statement of SO, 5). Seized office files SL.No.1 to 7 (Sd/-) XXXX மு.இன்பராஜ், தனிவட்டாட்சியர் (நி.எ) அலகு -3, சென்னை எல்லை சாலை திட்டம், திருவள்ளூர். திடீர் கூட்டுத் தணிக்கை செயல்முறை நடவடிக்கைகள்_செங்குன்றம் மாதவரம் ரோடு, புழல், மகாலட்சுமி நகர், சர்வீஸ் சாலை கதவு எண் 5675 P2X என்ற முகவரியில் புழல் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தில் இன்று 25.04.2024 மேற்கண்ட செயல்முறை நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டது. இன்று 25.04.2024 புழல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மனை வரன்முறை (Plot and Layout approval) மற்றும் பிற அரசால் வழங்கப்படும் வளர்ச்சி பணிகள் மற்றும் அதற்கான நிதிகளை உரிய பணிக்காக செலவிடும் பணியில் உள்ள இவ்வலுவலகத்தில் பொதுமக்களிடம் இருந்து லஞ்சம் பெறுவதாக நம்ப தகுந்த தகவல் கிடைத்ததின் பேரில் திருவள்ளூர்

| | |
|---|---|
| | |
| திடீர் கூட்டுத்தணிக்கையின் போது அலுவலில் இருந்த ஊராட்சி ஒன்றிய அலுவலக அதிகாரிகள் | 1. திரு.A.மணிசேகர்<br>வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி),<br>புழல்<br><br>2. திரு.P.அரசு,<br>துணை வட்டார வளர்ச்சி. அலுவலர் (நிர்வாகம்),<br>புழல்,<br><br>2. திரு.R.பாலசந்திரன்<br>துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (திட்டம்)<br>புழல்<br>மற்றும் ஊழியர்கள் |

திருவள்ளுர் மாவட்டம் மகாலட்சுமி நகர், புழல் சிறை (எதிரில்), புழல், சர்வீஸ் சாலை கதவு எண் 5675 P2X என்ற முகவரியில் அமைந்துள்ள புழல் ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தின் G.N.T ரோட்டின் கிழக்கு பகுதியின் மேற்கு பார்த்தவாறு இரண்டு பிரதான நுழைவாயில் அமைந்துள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தெற்கு பகுதியில் நிர்வாக பிரிவு அலுவலகமும் அதனை தொடந்து மேற்கு பார்த்தார் போல் பொறியியல் பிரிவு, கணிணி பிரிவு, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தனிக்கை பிரிவு, வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஒன்றிய குழு பெருந்தலைவர் அலுவலகம் அதனை தொடர்ந்து வடக்கு பகுதியில் மன்ற கூட்ட அரங்கம் உள்ளது அதன் பின்புறம் Video Conferencing மற்றும் அதன் அருகே பழைய ஆவண பதிவேடுகள் உள்ள அறை தெற்கு பார்த்தவாரும் உள்ளது.

ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தெற்கு பகுதியில் உள்ள நிர்வாக பிரிவு அலுவலகமானது கிழக்கு மற்றும் மேற்க்காக ஒரே அறையில் 18 பணியாளர்கள் இருக்கையுடன் கூடிய பெரிய அறையாக அமைந்துள்ளது. அறையின் கிழக்கு

பகுதியில் தடுப்புடன் கூடிய இரண்டு சிறிய அறைகள் அமைந்துள்ளன. அதில் அறையின் வலது புறத்தில் Planning Section னும், இடது புறத்தில் கணிணி அறையுமாக அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தின் அனைத்து பகுதிகளிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் நிர்வாக பிரிவு அலுவலக அறையின் கிழக்கு பக்கம் உள்ள Plan Section Room ல் திருமதி.ஈஸ்வரி, மற்றும் திருமதி.யுவாதிகா, தற்காலிக பணியாளர்கள் பணியில் இருந்தார்கள். அந்த அறையை சோதனை செய்தபோது அங்கிருந்த பீரோவில் லைட் ஆரஞ்சு grey Plastic கவரின் உள்ளே பெயர் எழுதப்பட்ட ப்ரவுன் கலர் கவர்கள் 4 இருந்தது அதனை கைப்பற்றி பிரித்து பார்த்தபொழுது 1. S.Anuradha, 28 என்று எழுதப்பட்டிருந்த கவரை பிரித்து சோதனை செய்ததில் அதில் 56XRs.500 = ரூ.28,000/- இருந்தது. 2.Anuradha Dhanalakshmi, 14 என்று எழுதப்பட்டிருந்த ப்ரவுன் கவரை பிரித்து சோதனை செய்ததில் அதில் 28XRs.500 = ரூ.14,000/-ரூ. இருந்தது. 3.Sangeetha Bhavani, 14 என்று எழுதப்பட்டிருந்த ப்ரவுன் கவரை பிரித்து சோதனை செய்ததில் அதில் 30XRs.500 = ரூ.15,000/-ரூ. இருந்தது. 4.Grodan (பெயர் சரியாக தெரியவில்லை), 50 என்று எழுதப்பட்டிருந்த ப்ரவுன் கவரை பிரித்து சோதனை செய்ததில் அதில் 100XRs.500 = ரூ.50,000/- இருந்தது. ஆக மொத்தம் ரூ. 1,07,000/- ரூபாய் இருந்தது. மேலும் நிர்வாக பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்த திருமதி.ஈஸ்வரி, மற்றும் திருமதி.யுவாதிகா, தற்காலிக பணியாளர்கள் மற்றும் நிர்வாக அலுவலக அறையில் இருந்த மற்ற அலுவலர்களை விசாரணை செய்தபோது தகுந்த விளக்கம் கூறாததால் மேற்படி பணம் லஞ்சமாக பெறப்பட்டிருக்கலாம் என கருதி விசாரணைக்காக என்னால் கைப்பற்றப்பட்டது.

மேலும் திருமதி.யுவாதிகா, தற்காலிக பணியாளர் என்பவரிடம் ரூ.1200/- மற்றும் ரூ.200/- இருந்தது. மேற்படி பணத்திற்கான விளக்கம் கேட்டபோது மனை

வரன்முறைக்காக (Plot and Layout approval) இன்று 25.04.2024 ந் தேதி மதியம் 01.00 மணி வரையில் பெறப்பட்ட 4 மனுக்கள், தலா ரூ.300/- வீதம் ரூ.1,200/- பெறப்பட்டதாகவும், மேலும் ரூ.200/- தனது சொந்த பணம் என்று கூறியதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்கண்ட வட்டார ஊராட்சி ஒன்றிய நிர்வாக பிரிவு அலுவலக அறையில், பணியில் இருந்த அலுவலர்கள் மற்றும் அவர்களிடமிருந்த பணம் பற்றிய விவரம்.

| S.No | NAME | Designation | Amount |
|---|---|---|---|
| | Admin Room | | |
| 1. | Tmt.Anuradha | Computer Assistant (Temporary Staff) | Rs.580 |
| 2. | Tr.P.Arasu | Dy.BDO (Admin) | Rs.520 |
| 3. | Tr.R.Balachandran | Dy.BDO Scheme | Rs.2970 |
| 4 | Tr.Boominathan | Accountant | Rs.230 |
| 5 | Tmt.Sulochana | Zonal Dy.BDO –I | Nil |
| 6 | Tmt.S.Uma Maheswari | Zonal Dy.BDO –II | Nil |
| 7 | Tmt.P.Vijayalakshmi | Typist | Nil |
| 8 | Tmt.Manjula | Junior Assistant | Nil |
| 9 | Tmt.R.Udayapraba | Assistant | Rs.430 |
| 10 | Tmt.Eswari | Temporary Staff (Planning Section) | Rs.300 |
| 11 | Tmt.Yuvadhika | Temporary Staff (Planning Section) | Rs.200 |
| 12 | Tmt.Nithya Kumari | Temporary Staff (Computer Section) | Rs.165 |
| 13 | Tmt.Dhanakotti | Temporary Staff (Computer Section) | Rs.70 |
| 14 | Tr.S.Anandhan | Assistant | Rs.350 |
| 15 | Tmt.S.Kanniammal | Junior Assistant | Rs.200 |
| 16 | Tmt.R.Eswari | Rural Welfare Officer Gr.I | Rs.800 |
| 17 | Tmt.Dillirani | Assistant | Rs.660 |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களிடம் சோதனை செய்த போது அவர்கள் ஆஜர் செய்த பணம் அவர்களது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால் அப்பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும் நிர்வாக பிரிவு அலுவலகத்தை தொடர்ந்து அடுத்தடுத்து இருந்த பொறியியல் பிரிவு, கணிணி பிரிவு, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தனிக்கை பிரிவு, வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஒன்றிய குழு பெருந்தலைவர் அலுவலகம் மற்றும் மன்ற கூட்ட அரங்க அறைகள் மற்றும் அங்கிருந்த அலுவலர்களிடம் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்தந்த அலுவலக அறையில் இருந்த அலுவலர்கள் தன் வசம் வைத்திருந்த பணம் பற்றிய விவரம் பின்வருமாறு.

| S.No | Name | Designation | Amount |
|---|---|---|---|
| | | Engineering Room | |
| 1 | Tr.S.Sathish Kumar | Assistant Engineer | Rs.1000 |
| 2 | Tmt.G.S.Sarala Devi | Overseer பணிமேற்பார்வையாளர் | Rs.330 |
| 3 | Tmt.K.V.Sathiyavani | Overseer பணிமேற்பார்வையாளர் | Rs.20 |
| | | Computer Room | |
| 4 | Tmt.Josephine Chandrakala | Computer Assistant (T) | Rs.350 |
| 5 | Tmt.Ramani | Computer Assistant (T) | Rs.527 |
| 6 | Tmt.Anbazhaki | Computer Assistant (T) | Rs.261 |
| 7 | Selvi.Sorna | Computer Assistant (T) | Nil |
| 8 | Selvi.Nisha | Computer Assistant (T) | Rs.50 |
| | | BDO (V.P) Room | |
| 9 | Tmt.Chitra Fernando | BDO, V.P | Rs.720 |
| | | Dy.BDO Auditor Room | |
| 10 | Tr.K.Arputharaj | Dy.BDO Audit | Rs.700 |
| 11 | Tmt.S.Devaki | Grand Line Panchayat Secretary | Nil |
| 12 | Tr.K.M.Mohan | Grand Line Panchayat (Sweeper) | Rs.80 |
| | | BDO (B.P) Room | |
| 13 | Tr.A.Manisekar | BDO, B.P | Rs.4500 |
| | | Others | |
| 14 | Tr.Ramesh | Driver (BDO B.P) | Nil |
| 15 | Tr.Yeswanth | Office Assistant | Rs.60 |
| 16 | Tmt.Uma | Office Assistant | Nil |

திருமதி.சித்ரா பொன்னான்டோ, BDO, (கிராம ஊராட்சி) அவர்கள் மாலை சுமார் 17.00 மணியளவில் ஊராட்சிகளில் நடக்கும் பணிகளை ஆய்வு செய்துவிட்டு அலுவலகம் வந்ததாக தெரிவித்தார்.

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களிடம் சோதனை செய்த போது அவர்கள் ஆஜர் செய்த பணம் அவர்களது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால் அப்பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) திரு.மணிசேகர் மற்றும் அவரது அலுவலக அறையை சோதனை செய்ததில் அவர் தன் பர்சில் வைத்திருந்த பணம் ரூ.4,500/- (9XRs.500) எடுத்து ஆஜர் செய்தார். அப்பணத்திற்கான விளக்கம் கேட்ட போது அவர் சரிவர பதில் அளிக்காததால் அப்பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலும் அவரிடம் ரூ.1,07,000/- கணக்கில் வரப்படாத பணம் அவருடைய அலுவலகத்தில் அவருடைய மேற்பார்வையில் தற்காலிக பணியில் இருக்கும் Planning Section அறையில் உள்ள பீரோவில் இருந்து எடுக்கப்பட்ட பணம் குறித்து விவரம் கேட்டபோது அதை பற்றி தனக்கு தெரியாது என்று தெரிவித்தார். ஆனால் அலுவலகத்தில் கையொப்பம் இடப்படும் ஆவணங்கள் அனைத்தும் மேற்படி தற்காலிக பணியாளர்களால் நிர்வகிக்கப்படுகிறது. திரு.மணிசேகர் அவர்களே அனைத்து ஆவணங்களுக்கும் உத்தரவு வழங்குபவர் ஆவார். அவர் உத்தரவு வழங்கிய பின்பு மேற்படி ஆவணங்கள் Planning Section அறையில் தான் வைக்கப்படுகிறது. எனவே மேற்படி கணக்கில் வராத பணத்திற்கு திரு.மணிசேகர், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), புழல் அவர்களே முழு பொறுப்பு உடையவராவார்.

மேலும் மேற்கண்ட திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணத்தின் விவரம் பின்வருமாறு.

| S.No | Amount Seized from | Amount |
|---|---|---|
| 1 | Steel Bureau in Planning Section Room | Rs.1,07,000 |
| 2. | Tr.A.Manisekar, (BDO, B.P) | Rs.4,500 |
| | Total | Rs.1,11,500 |

பணியில் இருந்த அனைத்து அலுவலர்களும் எழுத்து மூலமான வாக்குமூலத்தை அளித்தனர்.

ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பொதுமக்களிடமிருந்து மனை வரன்முறை சம்மந்தமாக பெறப்படும் மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டு, கட்டணத்தொகை DD மற்றும் Bank Challan மூலம் விண்ணப்பதாரர் தொகை செலுத்தியவுடன் வரைப்பட அனுமதி வழங்கப்படும். இந்த அலுவலக பணப்பரிவர்த்தனைகள் அனைத்தும் Online மூலம் நடைபெறுவதால், பொதுமக்களிடம் இருந்து ரொக்கமாக பணம் பெறப்படுவதில்லை என்று வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.மணிசேகர் அவர்கள் தெரிவித்தார்.

மேற்கண்ட ஆய்வின் போது மனை வரன்முறை சம்மந்தமாக கீழ்கண்ட மனுதாரர்களின் கோப்புகளில் திரு.மணிசேகர், BDO அவர்கள் சான்றொப்பமிட்ட நகல்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | ஆவணங்களின் விவரம் |
|---|---|
| 1. | சான்றொப்பமிட்ட நகல் திருமதி,S,பவாணி எனபவர் பெயரில் உள்ள புழல் ஊராட்சி ஒன்றிய அலுவலக மனை வரன்முறை அனுமதி கோப்பு எண்.RC,876/2024/.அ3 (பக்கம் 1 முதல் 89 வரை). |
| 2. | சான்றொப்பமிட்ட நகல் திருமதி,M,சங்கீதா என்பவர் பெயரில் உள்ள புழல் ஊராட்சி ஒன்றிய அலுவலக மனை வரன்முறை அனுமதி கோப்பு எண்.RC.322/2024/A3 (பக்கம் 1 முதல் 61 வரை). |
| 3. | சான்றொப்பமிட்ட நகல் திருமதி.S,அனுராதா என்பவர் பெயரில் உள்ள புழல் ஊராட்சி ஒன்றிய அலுவலக மனை வரன்முறை அனுமதி கோப்பு எண்.RC.2772/2024/அ3 (பக்கம் 1 முதல் 185 வரை). |

| | |
|---|---|
| 4. | சான்றொப்பமிட்ட நகல் திருமதி,B.தனலட்சுமி என்பவர் பெயரில் உள்ள புழல்ஊராட்சி ஒன்றிய அலுவலக மனை வரன்முறை அனுமதி கோப்பு எண்.RC.747/2024/அ3 (பக்கம் 1 முதல் 99 வரை). |
| 5 | சான்றொப்பமிட்ட நகல் புழல் ஊராட்சி ஒன்றிய கணினி உதவியாளர்கள் வருகைப்பதிவேடு ஏப்ரல் 2024. |
| 6 | சான்றொப்பமிட்ட நகல் புழல் ஊராட்சி ஒன்றியம் திட்டம் வருகை பதிவேடு ஏப்ரல் 2024. |
| 7 | சான்றொப்பமிட்ட நகல் புழல் ஊராட்சி ஒன்றியம் பொது வருகை பதிவேடு ஏப்ரல் 2024. |

மேற்கண்ட விண்ணப்பதாரர் 1. திரு.S.பவாணி அவர்களின் கோப்பிற்கு கேட்பு கடிதம் (Demand letter) 15.04.2024 அன்று ரூ.17,000/-ற்கு வழங்கப்பட்டுள்ளது. 2.திருமதி,M,சங்கீதா என்பவர் பெயரில் உள்ள புழல் ஊராட்சி ஒன்றிய அலுவலக மனை வரன்முறை அனுமதி கோப்பு எண்.RC.322/2024/A3 (பக்கம் 1 முதல் 61 வரை) உள்ளது, இக்கோப்பிற்கு கேட்பு கடிதம் (Demand letter) 19.03.2024 அன்று ரூ.12,700/-ற்கு வழங்கப்பட்டுள்ளது. 3. திருமதி.S,அனுராதா என்பவர் பெயரில் உள்ள புழல் ஊராட்சி ஒன்றிய அலுவலக மனை வரன்முறை அனுமதி கோப்பு எண்.RC.2772/2024.அ3 (பக்கம் 1 முதல் 185 வரை) உள்ளது, இக்கோப்பிற்கு கேட்பு கடிதம் (Demand letter) 01.02.2024 அன்று ரூ.28,000/-ற்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மனுதாரர் கர்நாடகா வங்கி அம்பத்தூர் கிளையில் 18.04.2024 தேதிய வரைவோலை எண்கள் i) 067636 ன்படி ரூ.20/-ற்கும், ii) 067635 ன்படி ரூ.40/-ற்கும், iii) 067634 ன்படி ரூ.8,600/-ற்கும், iv) 067633 ன்படி ரூ.2,000/-ற்கும்கட்டணம் செலுத்திய விபரங்களை அளித்துள்ளார். 4.திருமதி,B.தனலட்சுமி என்பவர் பெயரில் உள்ள புழல்ஊராட்சி ஒன்றிய அலுவலக மனை வரன்முறை அனுமதி கோப்பு

எண்.RC.747/2024/அ3 (பக்கம் 1 முதல் 99 வரை) உள்ளது, இக்கோப்பிற்கு கேட்பு கடிதம் (Demand letter) 08.04.2024 அன்று ரூ.17,000/-ற்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கேட்பு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தொகையினை வரைவோலை மற்றும் செலான் மூலம் செலுத்திய விவரம் உள்ளது.

பெயர் சரியாக தெரியாத ரூபாய் 50,000/- இருந்த கவரிற்கு கோப்பு அறிய இயலவில்லை. மேற்படி ஆவணங்களில் உள்ள விண்ணப்பதாரர் பெயர்கள் அலுவலக கணக்கில் வரப்படாத பணம் கைப்பற்றப்பட்ட கவர்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஆவணங்களின் சான்றொப்பமிட்ட நகல்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி கணக்கில் வராத தொகை ரூபாய் 1,11,500/- கைப்பற்றப்பட்டு, அலுவலர்களிடம் எழுத்து மூலமான வாக்குமூலங்கள் பெறப்பட்டது. மேலும் திடீர் ஆய்வு செயல் முறையில் நான் மற்றும் 2.திரு.S.சம்பத்குமார், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-3, சென்னை-16, 3.திருமதி.C.உமாதேவி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-3, சென்னை-16, 4.திரு.M.அசோக்பாபு, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-3, சென்னை-16, 5. திரு.A.மணிசேகர், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), புழல், 6. திரு.P.அரசு, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்), புழல், 7. திரு.R.பாலசந்திரன்,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (திட்டம்), புழல் ஆகியோர் கையொப்பம் இட்டோம். திடீர் ஆய்வு சோதனை இன்று 25.04.2024 ந் தேதி 23.15 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒம்/-xxxx, மு.இன்பராஜ், தனிவட்டாட்சியர் (நி.எ) அலகு -3 சென்னை எல்லை சாலை திட்டம், திருவள்ளூர். ஒம்/-xxxx, S.சம்பத்குமார், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-3, சென்னை-16. ஒம்/-xxxx, C.உமாதேவி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு

மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-3, சென்னை-16. ஓம்/-xxxx, M.அசோக்பாபு, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நகர சிறப்பு பிரிவு-3, சென்னை-16. ஓம்/-xxxx, A.மணிசேகர், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), புழல். ஓம்/-xxxx, P.அரசு, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்), புழல், ஓம்/-xxxx, R.பாலசந்திரன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (திட்டம்), புழல்.

Sir,

Received the above complaint with enclosures, a case was registered in V&AC, CSU-III Detachment Cr.No. 03 /AC/2024/CC-II U/s 102 Cr.PC and 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 26.04.2024 at 15.00 hrs and took up investigation. The original FIR along with complaint enclosed with Joint Surprise Check Proceedings, statement of Tr.A.Manisekar, Certified copies of records are submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur and copies are forwarded to superior officers concerned.

C. Umadevi 26/04/2024

(C.UMADEVI)
Inspector of Police,
Vigilance and Anti Corruption,
City Special Unit –III,
Alandur, Chennai-16